
T.ANURADHA- THINAIMALAI NUTURAMBAITHIL KURUNCHI NILA VARUNANAI(2018)



# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ் இலக்கியங்களில் இயற்கைக் கூறுகள் (பன்னாட்டுக் கருத்தரங்கம்) |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் அ.அக்தர் பேகம்<br>முனைவர் மு.சுமதி |
| | | துணைப் பதிப்பாசிரியர்கள்<br>பேரா. இ.மாலா<br>பேரா. தி.அனுராதா<br>பேரா. மா.நஜ்மூன்<br>பேரா. அர.அன்பழகி<br>பேரா. ஆ.ஹாஜிரா பேகம்<br>பேரா. து.சுமதி |
| உரிமை | : | தமிழ்த்துறை |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 287 |
| விலை | : | ரூ.450/- |
| ISBN | : | 978-81-930477-9-8 |
| பதிப்பகம் | : | பரிதி பதிப்பகம்,<br>சோலையார்பேட்டை.<br>வேலூர் மாவட்டம். |
| கணினி | : | சு.ஜெகவீரன்,<br>சரவணா கிராபிக்ஸ் பிரிண்டர்ஸ்<br>சத்துவாச்சாரி, வேலூர்.<br>செல்: 98658 20640. |


ஆய்வுக் கட்டுரை கருத்துக்கள் கட்டுரையாளர்களைச் சாரும். கருத்துக்களுக்குப் பதிப்பகமோ தொகுப்பாசிரியரோ பொறுப்பல்ல

T.ANURADHA- THINAIMALAI NUTURAMBAITHIL KURUNCHI NILA VARUNANAI(2018)

# பொருளடக்கம்


1. ஐங்குறுநூற்றில் பாலைக் காட்சிகள்
முனைவர் கதிர் முருகேசன் ... 11

2. தமிழ் இலக்கியத்தில் உணவுகள்
முனைவர். ஆ. முனியாண்டி ... 15

3. ஐந்திணை ஐம்பதில் இயற்கை
முனைவர் மு. சுமதி ... 20

4. ஆற்றுப்படை நூல்கள் காட்டும் நீர் வளம்
முனைவர் இ.ஆர். இரவிச்சந்திரன் ... 25

5. ஆற்றுப்படை நூல்களில் காணலாகும் இயற்கை உணவுகள்
முனைவர் ராதிகா மேகநாதன் ... 34

6. தமிழிலக்கியங்களில் இயற்கை
முனைவர் அ.ஜான்சிராணி ... 39

7. கம்பன் காட்டும் மேகங்கள்
முனைவர் பொன்.செல்வகுமார் ... 45

8. பழந்தமிழரின் இறை வாழ்வு [இயற்கை வாழ்வு]
முதுமுனைவர். ப.அம்முதேவி ... 50

9. மதுரைக்காஞ்சியின் இயற்கைவளம்
இ.மாலா ... 58

10. சங்க அகப்பாடல்களில் ஆறு, யாறு
மு. முரளி ... 63

11. சங்க இலக்கிய பாடலில் இயற்கை
அ.அப்சர் ... 70

12. தமிழ் இலக்கியமும் இயற்கையும்
முனைவர் கே.எஸ். அன்புகலா ... 78

13. தமிழிலக்கியங்களில் தமிழர்களின் இயற்கை உணவு முறைகள்
முனைவர் S.கிரேசிராணி ... 82

14. திணை மாலை நூற்றைம்பதில் குறிஞ்சி நில வர்ணனை
தி.அனுராதா. ... 88

15. சங்க இலக்கியம் : இயற்கை வழிபாடு
பா.ஜோதி ... 93

**தி.அனுராதா.,** எம்.ஏ.,எம்ஃபில்.,
தமிழ்ப் பேராசிரியர்,
இசுலாமியா மகளிர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, நியுடவுன்,
வாணியம்பாடி 635752
அலைபேசி: 9585739897

14

# திணை மாலை நூற்றைம்பதில் குறிஞ்சி நில வர்ணனை

## முன்னுரை

பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த சூழலை புலவர் தங்கள் கவித்திறனால் வார்த்தைகளால் வடித்து தந்துள்ளனர். ஐந்து நிலங்களுள் ஒன்றான குறிஞ்சியின் இயற்கை அமையும் பாங்கினை இவ்வாய்வுக் கட்டுரை திணைமாலை நூற்றைம்பதின் வழி விளக்குகிறது.

## குறிஞ்சித்திணையில் மலர்கள்

தினைப்புனம் காக்கச் சென்ற தலைவியும் தோழியும் சுனையில் நீராடினர். மலையில் இருந்த பல வகையான மலர்களையும் பறித்து வந்து அங்கிருந்த பாறையில் குவிக்கின்றனர் இந்த மலர்களை கொண்டு தலைவியும் தோழியும் மாலை தொடுத்தும் புனைந்தும் மகிழ்ந்தனர்.

> **“தாமரை தண்தா தூதி மீமிசைச்**
> **சாந்தின் தொடத்த நீந்தேன் போலப்**
> **சிறுமை யுறுபவோ செய்பறி யலரே” (நற்றிணை 39)**

என்ற நற்றிணைப் பாடல் இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பாடலில் வண்டானது தாமரைப் பூவின் தாதினை ஊதிச் சென்று உயரமாக வளர்ந்துள்ள சந்தன மரத்தில் கூடு கட்டும். அது போல தலைவிக்குத் தலைவனுடன் இருக்கும் நட்பு என்றும் மேன்மையானது.'

உயிரைக் காப்பது போதுமென்று துணிந்த தலைவன் பரணில் தன்னைக் காத்துக் கொள்ளவதற்கு இயலாத தலையில் இருந்த

தலைவியை தாக்க வந்த யானையை தனது அம்பினால் கொன்று தலைவியைக் காப்பாற்றினான் காப்பாற்றிய தலைவன் தன் வீரத்தை தலைவிடம் மெய்பிக்கப் பல வகையான மலர்களைக், கொண்டு வந்தான் என்பதை,

**"அள்ளி அனைநிலம் சோபாலிகை செயலை**
**அள்ளி அளகத்தின் மேலாய்ந்து" (பாடல் 2)**

அவன் அனிச்ச மலரையும் சுனைக்கண் மலர்ந்த நீலோற் பல மலர்களையும், ஒளிமிக்க அசோக மலரையும் கொய்து வந்து தலைவியின் கூந்தலில் புனைந்தான் .இத்தகையை வலிமையுடைய வீரத்தையுடைய ஆண்மகன் தலைவியின் உள்ளத்தில் குடிக்கொண்டிருக்கிறான் என்று தோழி கூறினாள் இதில் குறிஞ்சி நிலத் தலைவனின் வீரம் காட்டப்பட்டுள்ளது.

**வேங்கை மரமும் நன்னிமித்தமும்**

வேங்கை மரத்தில் பூ பூக்குமாயின் தினை க்கதிர்கள் முற்றி விட்டது என்பது பொருள் இக்காலத்தில் அறுவடை செய்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று குறிஞ்சி நில மக்களின் நம்பிக்கை ஆகும். குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் கடத்தி வந்தான். தலைவியின் உடல் வேறுபாடுகண்டு அயலவர் தூற்றினர் இதனைக் கண்ட தோழி தலைவனிடம் நீ விரைவில் தலைவியை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறாள் அதற்கு தலைவன்,

**"வேங்கை விறிவிட நோக்கி**
**வீங்கிறைப் பணைந்தோள் வரைந்தனள் கொளற்கே"**
**(குறிஞ்சி 38)**

வேங்கை மரத்தில் பூ பூக்கும் மாதத்தில் தலைவியை திருமணம் செய்து கொள்வேன் என்று கூறுகிறான். இதன் மூலம் குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற மக்கள் எந்த நல்ல நிகழ்ச்சி செய்வது என்றாலும் இக்காலத்திலே செய்து வந்தனர் என்பதை அறியலாம்.

நன்றாக மழை பொழியும் நாளில் விதை விதைத்து முதிர்ந்த தினைப்புனத்தில் உள்ள கதிர்களைப் பறவைகள் கொய்து போகாமல் தடுக்க பரணை அமைத்தனர். அத்தகைய பரண் எவ்வாறு அமைத்தனர் என்பதை,

**"நறைபடர் சாந்தம் அறி அதிறந்து நாளால்**
**உறை எதிர்த்து வித்திய ஊழ் ஏனல்" (பாடல் 1)**

உடையது. அது போலவே மற்ற நிலத்தில் வாழ்கின்ற மக்களைக் காட்டிலும் குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற தலைவனின் குணம் வருக்கை பலா என்ற கனியோடு ஒப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய தன்மையுடைய தலைவனை தவிர வேறு யாரையும் என் தோழி தீண்ட மாட்டாள் என்று தோழி கூறுகிறாள்.

மடலேறுதல் என்பது ஐந்திணைக்கும் அடங்காத பெருந்திணையின் பாற்படும் குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற தலைவன் பனை ஓலையில் குதிரை ஒன்றை செய்து தலைவியின் உருவம் வரைந்து அதன்மேல் அமருவான் அமருவதற்கு முன்பு தன் உடல் முழுவதும் திருநீறு பூசிக் கொண்டும் தன் கழுத்தில் எலும்பு மாலை அணிந்தும் தெருவின் முச்சந்தியின் அமருவான். இதனைப் பார்க்கும் சான்றோர்கள், தலைவியின் வீட்டிற்கு சென்று பெண் வீட்டாரிடம் பேசி திருமணம் செய்து வைக்க வேண்டும் .பெண் தர மறுக்கும் பட்சத்தில் தலைவி அவ்வூரில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றாக சென்று பேசித் திருமணம் ஏற்பாடு செய்வர். தலைவனின் காதலை உணர்ந்து வியந்து அவனுக்கு மணம் செய்வதையே குறிஞ்சி நிலத்தில் கடமைகளில் ஒன்றாக கருத்தினர்.

**"பனிவரை நீள் வேங்கைப் பயமலை நன்னாட"** (பாடல் 27)
குளிர்ந்த ஆறுகளையும் நெடிய வேங்கை மரங்களையும் கொண்ட பலவகையான வளங்கள் நிறைந்த நல்ல மலை நாட்டுத் தலைவனே, உன் நாட்டில் மட்டும் வளங்கள் நிறைந்துள்ளன. ஆனால் தலைவி வரைவுமேற்கொள்ள வேண்டினாள் ஆனால் நீ வரைவு செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்தினாய் இதனால் அவளின் மேனி அழகு கெட்டு மழை இன்மையால் காய்ந்து போகும் களர் நிலத்துக்கு ஒப்புமைப் படுத்தும் அளவிற்கு அவள் உடல் மெலிந்து காணப்படுகிறாள். வேங்கை மரம் வளருவதற்கு செழிப்பான மண் தேவைப்படுவது போலத் தலைவி மகிழ நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தோழி கூறுகிறாள் இதில் தலைவன் வாழும் நாட்டின் வளத்தைக் கூறி அதனுடன் தலைவியை ஒப்புமை கூறப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும்.

## முடிவுரை

குறிஞ்சி நில வர்ணனை என்று கூறியதும் நம் நினைவுக்கு வருவது மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். ஆனால் இக்கட்டுரையில் மலையில் இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தலைவன் தலைவியுடன் ஒப்புமைபடுத்தி கூறியிருப்பது சிறப்பாகும். தலைவியின் உண்மையான அன்பிற்கு அருவிநீரை உவமையாக கூறியிருப்பது சிறந்த உவமை. அதுமட்டுமன்றிக் குறிஞ்சி நிலத்தில் வளர்கின்ற மரங்கள் பூக்கள் அருவிநீர் மலைப்பகுதி இவற்றில் நிகழும் இயற்கையாகக் நிகழ்வை உவமையாக கூறியிருப்பது சிறப்பாகும். இதைக் காணும் போது சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையை எந்தளவு நேசித்து இருக்கின்றனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

T.ANURADHA- THINAIMALAI NUTURAMBAITHIL KURUNCHI NILA VARUNANAI(2018)

